

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் நேற்று (24.08.2024) சந்தித்து, கலைஞர் நூற்றாண்டு நினைவு நூறு ரூபாய் நாணயத்தைப் பெற்றுக் கொண்டார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (24.08.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஃபார்முலா – 4 (F4) கார் பந்தய போட்டி நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

# பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.25-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.08.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத் துறை சார்பாக பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டினை தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் கூட்டத்தில், தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் பெருமையை உலகெங்கிலும் உள்ள முருகபக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடத்திட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 2024 ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் பழனியில் நடைபெறுகின்ற இம்மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து முக்கிய பிரமுகர்கள், முருக பக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டு வளாகத்தில் வேல் அரங்கம், அருள்தரும் அறுபடை முருகனின் மூலவர் காட்சிகள், பார்ப்பவர்கள் பரவசமடையும் மெய்நிகர் காட்சிகள், முப்பரி மாணப் பாடலரங்கம், சிறப்புப் புகைப்படக் கண்காட்சி, ஆய்வரங்கங்கள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் அமைச்சர் பெருமக்கள், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள், தவத்திரு ஆதீன பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள முக்கிய பிரமுகர்கள், முருகப் பக்தர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். அதனை தொடர்ந்து மாநாட்டு விழா மலர் மற்றும் ஆய்வு மலர்கள் வெளியிடப்படுகின்றன.

மாநாட்டின் நிறைவு விழாவில் தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப் பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர், ஆன்மிக மற்றும் இலக்கிய படைப்பாளர்களை சிறப்பிக்கும் வகையில் நக்கீரர், போகர், அருணகிரிநாதர், குமரகுருபரர், பாம்பன் சுவாமிகள். அண்ணாமலை ரெட்டியார், முருகம்மையார், பாலதேவராயர், திருமுருக கிருபானந்த வாரியார், தேனூர் வரகவி சொக்கலிங்கனார், கந்தபுராணக் கச்சியப்பர், பகழிக்கூத்தர், சிதம்பர சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், மாம்பழக் கவிச்சிங்க நாவலர் என 15 முருகனடியார்களின் பெயரில் விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட உள்ளது. மாநாட்டின் இரண்டு நாட்களும் ஆன்மிக சொற்பொழிவுகள், கருத்தரங்கம், இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் இம்மாநாடு முத்தாய்ப்பாக அமைவதோடு, தமிழ் கடவுளாம் முருக பெருமானின் பெருமைகளை மென்மேலும் பறைசாற்றி, உலகெங்கும் உள்ள முருக பக்தர்கள் பெருமையும், பேருவகையும் கொள்ளச் செய்யும் வகையில் இரு நாட்கள் சிறப்பாக நடைபெறும்.

பழனியிலிருந்து இத்தொடக்க விழா நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தருமபுரம் ஆதீனம் தவத்திரு தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம் தவத்திரு ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், தவத்திரு இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான், லண்டன் துணை மேயர் பரம்நந்தா, மலேசிய முன்னாள் அமைச்சர் திரு. சுப்பிரமணியன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என். ஸ்ரீதர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (24.08.2024) பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, எதிர்கால விளையாட்டுப் போட்டிகள் குறித்து கலந்துரையாடி, நினைவுப் பரிசு வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இலக்கிய உலகம் வியக்கும் வகையில் சாதனை படைத்துள்ளவர்!

# கலைஞரின் அனைத்து நூல்களும் இனி கடல் தாண்டி பயணிக்கும்!

## ‘தினகரன்’ நாளேடு புகழாரம்!

**சென்னை, ஆக. 25-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத் தொகை எதுவும் இன்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதையொட்டி ‘தினகரன்’ நாளேடு தனது தலையங்கத்தில் “கலைஞரின் அனைத்து நூல்களும் இனி கடல் தாண்டி பயணிக்கும்” என்று புகழாரம் சூட்டியுள்ளது.**



தினகரன்

ஆகஸ்ட் 24, 2024 சனிக்கிழமை

இனி - நீள்வார்

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும், திமுக முன்னாள் தலைவருமான கலைஞர் கருணாநிதியின் நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத்தொகை எதுவும் இன்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன் தினம் அறிவித்துள்ளார். தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சி துறையால் தமிழ் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூல் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 179 தமிழ் அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.14.42 கோடி நூல் உரிமைத்தொகை அரசால் வழங்கப்பட்டுள்ளன. அந்த வரிசையில் கலைஞரின் படைப்புகளும் அணிவகுத்துள்ளன. கலைஞர் கருணாநிதி 1924ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை கிராமத்தில் பிறந்தார். தனது கடின உழைப்பாலும், அளப்பரிய திறமையாலும், தமிழ் வளத்தாலும், தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் ஆளுமையாக விளங்கினார்.

இதுகுறித்து ‘தினகரன்’ நாளேடு 24.8.2024 தேதியிட்ட தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும், தி.மு.க. முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் நூல்கள் அனைத்தும் நூல் உரிமைத்தொகை எதுவும் இன்றி நாட்டுடைமை ஆக்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன் தினம் அறிவித்துள்ளார். தமிழ்நாடு அரசின், தமிழ் வளர்ச்சி துறையால் தமிழ் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூல் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 179 தமிழ்அறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.14.42 கோடி நூல் உரிமைத்தொகை அரசால் வழங்கப்பட்டுள்ளன. அந்த வரிசையில் கலைஞரின் படைப்புகளும் அணிவகுத்துள்ளன. முத்தமிழறிஞர் கலைஞர் 1924ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை கிராமத்தில் பிறந்தார். தனது கடின உழைப்பாலும், அளப்பரிய திறமையாலும், தமிழ் வளத்தாலும், தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் ஆளுமையாக விளங்கினார்.

கலைஞர் இது வெறும் பெயர் மட்டுமல்ல, தமிழ் இனத்தின் தனி முகவரி. பல தலைமுறைகளின் எழுச்சிக்கான திறவுகோல். 5 முறை முதலமைச்சர், 13 முறை சட்டமன்ற உறுப்பினர் என ஒரு தலைமுறை மாற்றத்திற்கு வித்திட்டவர். தமிழ் உணர்வு கொண்ட 14 வயது சிறுவனாக தனது இலக்கிய வாழ்வை தொடங்கிய அவர், 15வது வயதில் ‘மாணவநேசன்’ என்ற கையெழுத்து ஏடு நடத்தினார். 18வது வயதில் பேரறிஞர் அண்ணாவின், ‘திராவிட நாடு’ இதழில் இளமைப் பலி என்ற தனது முதல் கட்டுரை எழுதினார். இது, பெரும் வரவேற்பை பெற்றது.

23வது வயதில் ராஜகுமாரி திரைப்படத்திற்கு முதல் முறையாக வசனம் எழுதினார். ‘முரசொலி’ என்னும் துண்டு இதழை 1942ம் ஆண்டு வெளியிட்டார். 1960ம் ஆண்டில் அதனை முழுமையான நாளிதழாக மாற்றினார். 80 ஆண்டு காலம் பொதுவாழ்வு, 5 முறை முதலமைச்சர் என மக்கள் பணி மட்டுமல்லா மல், கலைஞர் 75 திரைப்படங்களுக்கு கதை, திரைக்கதை வசனம் எழுதியுள்ளார். 15 புதினங்களையும், 20 நாடகங்களையும், 15 சிறுகதைகளையும், 210 கவிதைகளையும் படைத்துள்ளார். இதுதவிர, அவர் பணியாற்றிய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்களையும் தீட்டியுள்ளார்.

தனி ஒரு மனிதரால் அவரது வாழ்நாள் காலத்தில் இத்தனை இலக்கிய படைப்புகளை வழங்க இயலுமா? என இலக்கிய உலகம் வியக்கும் வகையில் உலகளாவிய சாதனைகள் படைத்துள்ளார். கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலங்களில் 108 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை செய்து, அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூல் உரிமைத்தொகையாக ரூ.7 கோடியே 76 லட்சம் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார். இத்தகைய கலைஞரின் அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளதால், தமிழ்நாடு மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்கள் கலைஞரின் செழுமையான நூல்களை ஊன்றிப்படிக்க அரிய தொரு வாய்ப்பாக அமை யும் என்பதில் சந்தேகம் இல்லை.

சமூக நீதிக்காக அரும்பாடுபட்ட தலைவரும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடியவரும், தமிழுக்கு செம்மொழி தகுதியினை பெற்று தந்தவரும், தனது எழுத்து மற்றும் பேச்சுக்களின் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்தவருமான முத்தமிழறிஞர் கலைஞரின் அனைத்து நூல்களும் இனி கடல் தாண்டி பயணிக்கும். “ஒரு ரூபாய்கூட பெறாமல், கலைஞரின் தமிழை நாட்டுக்கே காணிக்கை செய்திருக்கும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மற்றும் கலைஞர் அவர்களின் குடும்பத்திற்கு எனது நன்றி. கலைஞர் வாழ்வார் என்பது தெரியும். இனி நீள்வார்” என கவிஞர் வைரமுத்து புகழாரம் சூட்டியுள்ளார். இதுவே, உண்மை.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தமது தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் 20 அரசுப் பள்ளி மாணவர்கள், நல்லாசிரியர் விருது பெற்ற ஒருவர் மற்றும் கல்வி அலுவலர் ஆகியோர் ஹாங்காங் நாட்டிலுள்ள Disneyland பூங்காவைப் பார்வையிட்டனர்.

### காரைக்குடியில் - சிவகங்கை மாவட்ட கழக துணைச் செயலாளர்

# திருமதி ஜோன்ஸ் ரூசோ மகன் திருமணம்!

## அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமை!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. திருமணத்தை நடத்தி வைக்கிறார்!

*சிவகங்கை, ஆக.25-*

சிவகங்கை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் திருமதிஆர். ஜோன்ஸ் ரூசோவின் மகன் நடிகர் ஆர்.நிஷாந்த். ரூசோவிற்கும் இளையான்குடி தாலுகா கல்லடிதிடலைச் சேர்ந்த எல்.எட்வர்ட் ஜோசப் திருமதி மஞ்சுளா மேரி ஆகியோரின் மகள் எ.சினேகா கேத்தரினுக்கும் திருமணம் 6.9.2024 - வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் காரைக்குடியில் உள்ள பி.எல்.பி பேலஸ் மஹாலில் கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

அமைச்சர்கள் கே.என். நேரு, தங்கம் தென்னரசு , எஸ். ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வீ.மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இந்திய ஜனநாயக கட்சி தலைவர் ரவி பச்சமுத்து, இந்திய ஜனநாயக கட்சியின் அகில இந்திய இணைபொதுச் செயலாளர் திருமதி வீமாரோஸ் மார்டின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமணத்தினை கழகத் துணை பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து சிறப்புரை யாற்றுகிறார்.

திருமணத்தில் மணமக்களை வாழ்த்தி முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. ராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், வசந்தம் கார்த்திகேயன், எஸ். மாங்குடி, இ.கருணாநிதி, கார்த்திப..சிதம்பரம் எம்.பி. உட்பட மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சியினர் வாழ்த்திப் பேசுகிறார்கள். திருமண விழா ஏற்பாடுகளை திருமதி ஆர். ஜோன்ஸ்ரூசோ வின், ராஜா ஸ்டீபன், ஆர். ஜெம்மா. நிபிலா, க.அழகையா மற்றும் குடும்பத்தினர் செய்து வருகிறார்கள்.